EXAMS DAILY தமிழ்

# பிப்ரவரி 14 நடப்பு நிகழ்வுகள்

## தேசிய செய்திகள்

### பீகார்

#### முக்கிய மந்திரி வ்ரிதஜன் ஓய்வூதிய யோஜனா

- பீகார் அரசு அனைவருக்குமான முதியோர் ஓய்வூதிய திட்டத்தை அறிவித்துள்ளது - **முக்கிய மந்திரி வ்ரிதஜன் ஓய்வூதிய யோஜனா**- MVPY 60 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும்.
- அரசாங்க சேவையில் இருந்து ஓய்வு பெற்ற மூத்த குடிமக்களைத் தவிர்த்து இதர சாதி, மதம், சமூக பாகுபாடின்றி அனைவருக்கும் 400 ரூபாய் மாதாந்திர ஓய்வூதியமாக வழங்கப்படும்.

#### பீகார் பத்ரகார் சம்மன் யோஜனா (BPSY)

- 60 வயதிற்கு மேலான பத்திரிகையாளர்களுக்காக 6,000 ரூபாய் ஓய்வூதியம் - பிஹாார் பத்ரகார் சம்மன் யோஜனா (BPSY) - ஊடகங்கள் மற்றும் வேறு எந்த ஓய்வூதியத்தையும் பெறாதவர்கள் இதற்கு தகுதியுடையவர்கள்.

### புது தில்லி

#### "வந்தே பாரத் எக்ஸ்பிரஸ்"

- இந்திய இரயில்வேயின் 'மேக் இன் இந்தியா' திட்டம் மூலம் தயாரித்த நாட்டின் முதல் என்ஜின் இல்லா ரெயிலான வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரெயில் சேவையை பிரதமர் நரேந்திர மோடி டெல்லியில் கொடி அசைத்து துவக்கி வைத்தார்.
- வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரெயில் டெல்லியில் இருந்து வாரணாசி வரை இயக்கப்படுகிறது. 30 ஆண்டு காலமாக இயக்கப்படும் சதாப்தி எக்ஸ்பிரஸ் ரெயிலுக்கு மாற்றாக இது அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

### தமிழ்நாடு

#### அரசு கட்டுமான பணிக்கு எம் சாண்ட்-ஐ பயன்படுத்த ஊக்குவிக்கிறது

- ஆற்று மணலுக்கு மாற்றாக தமிழக அரசு கட்டுமானப் பணிகளுக்காக எம் சாண்ட்-ஐ பயன்படுத்த ஊக்குவிக்கிறது.

**ராஜஸ்தான்**

**குஜ்ஜார்கள், நான்கு பிற சமூகங்களுக்கான 5% ஒதுக்கீட்டு மசோதா**

- ராஜஸ்தான் அரசு, குஜ்ஜார்கள், நான்கு பிற சமூகங்களுக்கு வேலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் 5 சதவிகித ஒதுக்கீடு வழங்குவதற்காக ஒரு மசோதாவை நிறைவேற்றியது.
- ராஜஸ்தான் சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பு சட்டதிருத்தம் 2019 ஐ அரசு அறிமுகப்படுத்தியது.
- கிரீமி லேயர் உச்சவரம்பை 2.5 லட்சத்திலிருந்து ரூ.8 லட்சமாக அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
- இந்த மசோதா மூலம் பிற்படுத்தப்பட்டோருக்கான ஒதுக்கீடு 21 சதவீதத்திலிருந்து 26 சதவீதமாக உயர்கிறது.

**சர்வதேச செய்திகள்**

**ஆப்கானின் தலிபான் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்த அறிவிப்பு**

- ஆப்கானிஸ்தான் சமாதானப் பேச்சுவார்த்தையின் ஒரு பகுதியாக இஸ்லாமாபாத்தில் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் உள்ளிட்ட உயர் பாகிஸ்தானிய மற்றும் அமெரிக்க அதிகாரிகளை சந்திக்க உள்ளதாக தாலிபன் அறிவித்துள்ளது.

**ஏமனில் இருந்து அனைத்து அமெரிக்க இராணுவ ஆதரவையும் திரும்பப் பெற அமெரிக்கா முடிவு**

- அமெரிக்க பாராளுமன்றம் ஏமனில் சவூதி அரேபிய ஆதரவில் நடைபெறும் யுத்தத்திற்கு வழங்கும் அனைத்து அமெரிக்க இராணுவ ஆதரவையும் திரும்பப் பெறும் மசோதாவை நிறைவேற்றியுள்ளது.

**தரவரிசை & குறியீடு**

**தேசிய குறைந்தபட்ச ஊதியத்தை நிர்வகிப்பதற்கான வழிமுறைகளை நிர்ணயித்தல் பற்றிய அறிக்கை**

- தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் 2017ம் ஆண்டு தேசிய குறைந்தபட்ச ஊதியம் (NMW) நிலைநிறுத்தலுக்கான முறையை ஆய்வு செய்து

பரிந்துரைக்க வேண்டி ஒரு நிபுணர் குழுவை டாக்டர் அனூப் சத்பதி தலைமையின் கீழ் அமைத்தது.

- "தேசிய குறைந்தபட்ச ஊதியத்தை சீர்குலைப்பதற்கான வழிமுறைகளை தீர்மானித்தல்" தொடர்பான தனது அறிக்கையை இந்திய அரசாங்கத்திற்கு நிபுணர் குழு சமர்ப்பித்துள்ளது.

**நியமனங்கள்**

- வைஸ் அட்மிரல் எஸ்.என். கோர்மடே, ஏ.வி.எஸ்.எம்., என்.எம் - **தலைமை பணியாளர், கிழக்கு கடற்படை கமேண்ட்**

**திட்டங்கள்**

**பிரதான் மந்திரி ஸ்ரம் யோகி மான்-தன் (PM-SYM)**

- **குறைந்தபட்ச காப்பீட்டு ஓய்வூதியம்:** PM-SYM கீழ் ஒவ்வொரு சந்தாதாரரும் 60 வயதை அடைந்த பின்னர் மாதத்திற்கு 3000 / - என்ற குறைந்தபட்ச ஓய்வூதியம் பெறுவார்கள்.
- **குடும்ப ஓய்வூதியம்:** ஓய்வூதியம் பெறும் போது, சந்தாதாரர் இறந்துவிட்டால், பயனாளியின் மனைவி குடும்ப ஓய்வூதியத்தில் பயனாளியின் 50% பெறுவார். இந்த குடும்ப ஓய்வூதியம் மனைவிக்கு மட்டுமே பொருந்தும்.

**புரிந்துணர்வு ஒப்பந்தம்(MoU), ஒப்பந்தங்கள் & மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

**மத்திய அரசின் பழங்குடி சமூகநலத் திட்டங்களைத் தொடர அமைச்சரவை அனுமதி**

- 2020ஆம் ஆண்டு மார்ச் வரை பட்டியிலிடப்பட்ட பழங்குடியினரின் வளர்ச்சிக்கான குடை திட்டத்தின் கீழ் துணைத் திட்டங்களை தொடர பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு (CCEA) அங்கீகரித்துள்ளது.

**மூல சணலின் குறைந்தபட்ச ஆதரவு விலை ரூபாய் 250 உயர்வு**

- 2019 -20 பருவத்திற்கான மூல சணலின் குறைந்தபட்ச ஆதரவு விலையை குவிண்டாலுக்கு 250 ரூபாய் உயர்த்தி ரூ.3950 ஆக மத்திய அமைச்சரவை உயர்த்தியது.

**பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு கடன் இணைக்கப்பட்ட மூலதன மானியத்திற்கு ஒப்புதல்**

- 2900 கோடி ரூபாய் மதிப்பிலான கடன் இணைக்கப்பட்ட மூலதன மானிய - தொழில்நுட்ப மேம்பாட்டுத் திட்டத்திற்கு (CLCS-TUS) பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு, CCEA ஒப்புதல் அளித்துள்ளது.
- கடன் இணைக்கப்பட்ட மூலதன மானியம் (CLCS) மூலம் விரிவாக்க தொழில்நுட்பத்தை இலக்காகக் கொண்ட பல்வேறு திட்டவட்டமான தலையீடுகளை ஒருங்கிணைப்பதன் மூலம் MSME களின் போட்டித்தன்மையை மேம்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

**இந்தியா-சவுதி அரேபியா இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்**

- சுங்கத் துறை விவகாரங்களில் இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் உதவிக்காக, முதலீட்டுக் கட்டமைப்பை உருவாக்குவதற்கான ஒரு செயல்முறையை நிறுவுவதற்கு வழிவகுக்க, சுற்றுலாத்துறையை வலுப்படுத்துவதற்காக இந்தியா மற்றும் சவுதி அரேபியா இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

**துப்புரவுப் பணியாளர்களுக்கான தேசிய ஆணையத்தின் பதவிக்காலம் 3 ஆண்டுகள் நீட்டிப்பு**

- துப்புரவுப் பணியாளர்களுக்கான தேசிய ஆணையத்தின் பதவிக் காலத்தை, 31.03.2019 -லிருந்து மூன்றாண்டுகளுக்கு நீட்டிப்பதற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

**அயல்நாடு-வாழ் இந்தியர் திருமணப் பதிவு மசோதா 2019**

- இந்திய குடிமக்கள், குறிப்பாக பெண்கள், தமது அயல்நாடு வாழ் இந்திய கணவர்களால் சுரண்டப்படுவதிலிருந்து தடுத்து பாதுகாப்பு அளிப்பதற்கும், இந்த திருமணங்களில் அதிகப் பொறுப்புணர்வை உருவாக்குவதற்காகவும், அயல்நாடு வாழ் இந்தியர் திருமணப் பதிவு மசோதா 2019-ஐ அறிமுகம் செய்வதற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

**பாட்னாவில் பொதுப் போக்குவரத்து மற்றும் இணைப்பு**

- பிரதமர் திரு.நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை பட்னாவில் ரூ. 13,365.77 கோடி மதிப்பிலான (i) தானப்பூர்- மித்தாப்பூர் (ii) பாட்னா ரயில்வே நிலையத்தில் மாநிலங்களுக்கு இடையேயான புதிய முனையம் ஆகிய இரண்டு மெட்ரோ ரயில் தடங்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

**பாதுகாப்பு செய்திகள்**

**பாரலல் டாக்ஸி ட்ராக்**

- இந்திய விமானப்படையில் முதன் முதலாக, "OTTERS" ஸ்காவாட்ரான் வெஸ்டர்ன் ஏர் கமாண்ட்டில், டார்னியர் 228 விமானத்தில் முழு பெண்கள் குழுவுடன் பாரலல் டாக்ஸி ட்ராக் (PTT) செயல்முறைகளை மேற்கொண்டுள்ளது. விமானிகள், Sqn Ldr கமல்ஜீத் கவுர் மற்றும் அவரது இணை விமானி Sqn LDR ராகி பண்டாரி சிர்ஸாவில் பாரலல் டாக்ஸி ட்ராக் டேக் ஆப் மற்றும் தரையிறங்கும் செயல்முறைகளை வெற்றிகரமாக மேற்கொண்டனர்.

**விளையாட்டு செய்திகள்**

**கோல்டு கோப்பை 2019**

- புவனேஸ்வரில் நடைபெறும் 2019 ஆம் ஆண்டு பெண்கள் ஹீரோ கோல்டு கோப்பை கால்பந்து இறுதிப் போட்டியில் மியான்மர் நேபாளத்துடன் மோதுகிறது.
- மியான்மர் கடைசி சுற்று ராபின் போட்டியில் 2-0 என்ற கணக்கில் இந்தியாவை தோற்கடித்ததுடன், நேபாளம் ஈரானை 3-0 என்ற கணக்கில் தோற்கடித்து இறுதிப்போட்டுக்குள் நுழைந்தது.

**Join Us on FB :**

**For English – Examsdaily** **For Tamil – Examsdaily Tamil**

**For WhatsAPP Group - Click Here**